# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## *2019 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க,*
## மதுவரி (திருத்தச்) சட்டம்

*(2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

*2019*, நவெம்பர் மாதம் *01* ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *8.00*** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *2019 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க,*
## மதுவரி (திருத்தச்) சட்டம்

[*2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.- ஓ. 46/2018*

### *(52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம் , 2019 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 35 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "46 ஆம் பிரிவின்கீழ் அல்லது 47 ஆம் பிரிவின்கீழ்த்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "46 ஆம், 47 ஆம் பிரிவுகளின்கீழ் அல்லது 48 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்த்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(அ) தனது சொந்த அறிவின்மீது அல்லது சந்தேகத்தின்மீது அல்லது ஒரு மதுவரி அலுவலரின் அல்லது பொலிசு அலுவலரின் முறைப்பாட்டின்மீது அல்லது அறிக்கையின்மீது தவிர, 46 ஆம் பிரிவின்கீழ், 47 ஆம் பிரிவின்கீழ் அல்லது 48 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்:

ஆயின், எவ்வாறாயினும், ஒரு பொலிசு அலுவலர் 48 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழான முறைப்பாடொன்றைச் செய்யுமிடத்து அல்லது ஓர் அறிக்கையைக்

காண்பிக்குமிடத்து, அத்தகைய அலுவலர் உதவிப் பரிசோதகர் பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அலுவலரொருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் மதுவரி ஆணையாளர்–தலைமையதிபதியின் அல்லது மதுவரி ஆணையாளர்–தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் எழுத்திலான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்;";

(2) அதன் (ஆ) என்னும் பந்தியில்,-

(அ) "48 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "48 ஆம் பிரிவின் (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) "49 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "49 ஆம் பிரிவின்கீழ், அல்லது" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(இ) தனது சொந்த அறிவின்மீது அல்லது சந்தேகத்தின்மீது அல்லது ஒரு மதுவரி அலுவலரின் முறைப்பாட்டின்மீது அல்லது அறிக்கையின்மீது தவிர, 50 ஆம் பிரிவின்கீழ்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*